# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## செய்யது சேஹுகோயா தங்கள் மௌலானா மன்றம்
## (கூட்டிணைத்தல்)

**செய்யது சேஹுகோயா தங்கள் மௌலானா மன்றத்தைக்
கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

---

*மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ அலி ஸாஹிர் மௌலானா செயிட் அவர்களால் 2015, திசெம்பர் மாதம் 11 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது*

*(2015, நவெம்பர் மாதம் 23 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ *48 ஆம் சட்டமூலம்* ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 8.00** **தபாற் செலவு : ரூபா 10.00**

## செய்யது சேஹு கோயா தங்கள் மௌலானா மன்றம் (கூட்டிணைத்தல்)

## செய்யது சேஹு கோயா தங்கள் மௌலானா மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

முன்னுரை.

"செய்யது சேஹு கோயா தங்கள் மௌலானா மன்றம்" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான மன்றமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்க சொல்லப்படட மன்றத்துடன் தொடர்புபட்ட எல்லாக் குறிக்கோள்களையும் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்கென இலங்கையில் இதற்கு முன்னால் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் :

அத்துடன் சொல்லப்பட்ட மன்றம் எந்தப் பல்வேறு குறிக்கோள் களுக்காகவும், கருமங்களுக்காகவும் உருவாக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும், கருமங்களையும் இதுகாலவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும், கொண்டுநடாத்தியும் வந்துள்ளா தாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ள தாதலாலும், சொல்லப்பட்ட விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கானதாகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தி னால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப் பெயர்.

***1***. இச்சட்டம், 2015 ஆம் ஆண்டின்    ஆம் இலக்க, செய்யது சேஹு கோயா தங்கள் மௌலானா மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

செய்யது சேஹு கோயா தங்கள் மௌலானா மன்றத்தைக் கூட்டிணைத்தல்.

***2***. இச்சட்டம் தொடங்கும் திகதியிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் "மன்றம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) செய்யது சேஹு கோயா தங்கள் மௌலானா மன்றத்தின் தற்போதைய உறுப்பினர்களாகவுள்ள அல்லது இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக, இனிமேல் சேர்த்துக்கொள்ளப்படும் அத்தகையோரான அத்தனை ஆட்களும், (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) " செய்யது சேஹு கோயா தங்கள் மௌலானா மன்றம்" என்னும் பெயர் மகுடத்தின்கீழ் இடையறாவழியுரிமை கொண்ட கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழு

வாதல் வேண்டும். அத்துடன் அப்பெயர்கொண்டு அது வழக்குத் தொடுக்கலாமென்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும் படலாம். அத்துடன் அது பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும், அது விரும்பியாங்கு அதனை மாற்றவும் முழுத்தத்துவமும், அதிகாரமும் உடையதாயிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3.** கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக் கோள்கள் பின்வருவாக இருத்தல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :-

(அ) இலங்கை வாழ் சகல இனங்களுக்கிடையில் சமாதான நல்லுறவு அன்னியோன்னியம் ஒத்துழைப்பு போன்ற வற்றை ஊக்கப்படுத்தல் ;

(ஆ) தக்கியாக்கள் அரபு மத்ரசாக்கள் மற்றும் அநாதை இல்லங்களை அமைத்தல் ;

(இ) தற்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள காத்தான்குடி முஹையத்தீன் தக்கியா காக்கயன் ஓடை முஹையத்தீன் தக்கியா கண்டியிலுள்ள மத்ரசதுல் மின்ஹாய்யாக மற்றும் அநாதை இல்லம் மற்றும் மஸ்ஜிதுர் ரிபாய்யா மற்றும் அரபு மத்ரசா மற்றும் அநாதை இல்லத்தை பரிபாலித்தல் ;

(ஈ) ஸெய்யத் கோயா தங்கல் மற்றும் தற்போதைய தவி சாளராகிய ஸெய்யத் புகாரி தங்கல் கோயா தங்களால் ஸ்தாபிக்கப்பட்ட நிறுவனங்களைப் பரிபாலித்தல் ;

(உ) சுன்னத் ஜமாஅத் முறைப்படி இஸ்லாமிய தர்மத்தை வளர்த்தல் ;

(ஊ) முஸ்லிம்களுக்கிடையேயும் மற்றும் மதங்களுக் கிடையேயும் சிநேகத்துவ உறவுகளை உருவாக்க உதவு தல் ;

(எ) இஸ்லாம் தர்மத்தைப் பற்றி குறிப்பிட்ட தலையங்கத்தில் சொற்பொழிவுகளை நடாத்துதல் ;

(ஏ) முஸ்லிம்களின் கல்வி நலனுக்காக மற்றும் மத உலக சம்பந்தமான கல்விகளை ஊக்குவிக்க உதவுதல் ;

(ஐ) முஹம்மத் நபி (ஸல்) அவர்களின் மற்றும் இஸ்லாத்திற்காக பாடுபட்டவர்களும் பிறந்தநாள் மற்றும் நினைவு கூறுதல் நிகழ்ச்சிகளை நடத்துதல் ;

(ஒ) இலங்கை வாழ் இனங்களுக்கிடையே ஒற்றுமை ஏற்படும் பொருட்டு வெவ்வேறு கலை கலாசார நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல் ;

(ஓ) இன, மத பேதமின்றி கல்வி மற்றும் சமய கலாசார விளையாட்டு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்வதோடு நிகழ்ச்சிகளை நடாத்துவதோடு போட்டிகளையும் நடாத்துதல் ;

(ஔ) இன்னலுற்றோர் நோய்வாய்ப்பட்டவர்கள் வைத்திய உதவிகளையும் அவர்களுக்கான உணவு வசதிகளையும் அநாதைகளுக்காக இல்லங்களையும் சிறுபிள்ளைகளைப் பராமரிக்க இல்லங்களை அமைத்தலும் முதியோர் சிறுவர் இல்லங்களை அமைத்தலும் ; அத்துடன்

கூட்டுத்தாபனத்தின் பொதுவான தத்துவங்கள்.

**4**. இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை மேம்படுத்துவதற்கும் முன்னேற்றுவதற்கும் அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான எத்தகையனவுமான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களையும், காரியங்களையும், செய்வதற்கும் புரிவதற்கும் நிறைவேற்றுவதற்கும் கூட்டுத்தாபனம் தத்துவமுடையாதல் வேண்டும். இத்தத்துவங்களுள் வங்கிக் கணக்குகளைத் தொடங்கவும், நடாத்தவும், முடிவுறுத்தவும், பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பின்றி பணங்களைக் கடனெடுக்கவும் அல்லது திரட்டவும் முரீதீன்கள், முஹிப்பீன்கள், பின்பற்றுவோர், நலன் விரும்பிகள் போன்றவர்களிடமிருந்து மானியக்கொடைகளையும் நன்கொடைகளையும், கொடைகளையும், பெற்றுக்கொள்ளவும் சேகரிக்கவும்

அதன் நிதிகளை முதலீடு செய்யவும் கூட்டுத்தாபனத்திற்கு உரித்தான அல்லது உரித்தாக்கப்பட்ட காணிகளில் கட்டடங் களைக் கட்டவும், கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறை வேற்றுவதற்குத் தேவையான அலுவலர்களையும், சேவையாளர் களையும் வேலையிலீடுபத்தல், வேலைக்கமர்த்துதல், வேலை நீக்கஞ் செய்தல் ஆகியவற்றுக்குமான தத்துவங்களும் அடங்கும்.

கூட்டுத்தாப னத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

**5.** (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கமைய அத்தகைய விதிகளில் ஏற்பாடு செய்யப்படக்கூடியவாறும் அதற்கிணங்க தெரிவு செய்யப்பட்ட தவிசாளர், செயலாளர், பொருளாளர் உட்பட 11 பேர் கொண்ட பதவிதாங்குநர்களைக் கொண்ட பணிப்பாளர் சபையொன்றினால் நிருவகிக்கப்படுதல்.

(2) மன்றத்தின் தாபன உறுப்பினரான சங்கைக்குரிய முஹம்மது செய்யது புஹாரி நல்ல கோயா தங்கள் பணிப்பாளர் சபையின் ஆயுட்காலத் தவிசாளராதல் வேண்டும். தவிசாளர் கூட்டுத்தாபனத்தின் நிறைவேற்று அதிகாரி ஆவார். இவர்களுக்குப் பின் அவர்களின் குடும்ப உறுப்பினர் ஒருவர் தவிசாளராதல் வேண்டும்.

கூட்டுத்தாப னத்தின் விதிகள்.

**6.** (1) ஏதேனும் பொதுக் கூட்டத்தில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றிலிரண்டு பங்குக்குக் குறையாதோரின் வாக்குப் பெரும்பான்மைகொண்டு, பின்வரும் கருமங்கள் எல்லாவற்றுக்கும் அல்லது எவற்றுக்கும், இச்சட்டத் தினதும் எழுத்திலான வேறேதேனுமொரு சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவிராத விதிகளைக் காலத்துக்குக் காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்திற்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :-

(அ) உறுப்பினர்களை வகைப்படுத்தல் மற்றும் அவர்களைச் சேர்த்தல், சந்தர்ப்பணங்களைச் செலுத்துதல், செலுத்த வேண்டிய கட்டணங்கள், அவர்களை விலக்குதல் மற்றும் அவர்களது பதவி விலகல் ;

(ஆ) நிர்வாக சபையின் பதவிக்காலம், அதன் உறுப்பினர் களது பதவி விலகல் அல்லது நீங்குதல், அதன் வெற்றி டங்களை நிரப்புதல் மற்றும் அதன் உறுப்பினர்களைத் தெரிவு செய்து நியமித்தல் ;

(இ) நிருவாக சபை மற்றும் ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் கடைப் பிடிக்கப்பட வேண்டிய நடைமுறைகள், அவ்வாறான கூட்டங்களைக் கூட்டுதல், கூட்ட நடப்பெண் மற்றும் அவற்றின் அலுவல்களைக் கொண்டு நடாத்துதல் ;

(ஈ) அவர்களது நியதிகள் மற்றும் நிபந்தனைகள் உட்பட மன்றத்தின் பல்வேறு அலுவலர்களது, முகவர்களது மற்றும் ஊழியர்களது அதிகாரங்கள், கடமைகளை நிறைவேற்றுதல் மற்றும் பணிகள், அதிகாரங்கள், கடமைகளை நிறைவேற்றுதல் மற்றும் பணிகள் ;

(உ) மன்றத்தின் சொத்துக்கள், ஆதனங்களின் நிர்வாகம் மற்றும் முகாமைத்துவம் அத்துடன் நிதியங்களின் நம்பிக்கைப் பொறுப்பு ; மற்றும்

(ஊ) மன்றத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றும் பொருட்டு தேவையான ஏதேனும் வேறு விடயங்கள்.

(2) இவ்வாசகத்தின் (1) ஆவது உபவிதியின்கீழ் ஆக்கப்படும் விதி எதுவும் அதேபோன்றதொரு கூட்டத்திலும் அதே முறையிலும் திருத்தப்படலாம் அல்லது இல்லாதொழிக்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் எல்லா உறுப்பினர்களும் அப்போதைக்கு வலுவிலிருக்கும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைந்தோராதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் நிதியம்.

**7.** (1) கூட்டுத்தாபனம், அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், இறுதி விருப்பாவணக் கையளிப்பு, பொறுப்புக்கள், நன்கொடைகள், சேகரிப்பு நிதிகள், கட்டணங்கள் என்ற வகையாகக் கிடைக்கக்கூடிய எல்லாப் பணங்களும் முகாமைச் சபை தீர்மானிக்கும் ஒன்றோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் பெயரில் வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனம் தத்துவங்களையும் பணிகளையும் செயற்படுத்துவதிலும் நிறைவேற்றுவதிலும் கூட்டுத்தாபனத்தால் உறப்படும் எல்லாச் செலவினங்களையும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் கணக்குகளும் கணக்காய்வும்.*

**8.** (1) பணிப்பாளர்கள் சபையானது கூட்டுத்தாபனத்தால் பெறப்பட்டு செலவிடப்பட்ட எலலாப் பணங்களும் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் ஒவ்வோராண்டும் ஒரு முறையாவது பணிப்பாளர்கள் சபையினால் நியமிக்கப்படும் கணக்காளர் ஒருவரால் அல்லது ஒன்றுக்கு மேற்பட்டோரால் பரிசோதனை செய்யப்பட்டு கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனம் அசைவுள்ள அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்கலாமென்பது.*

**9.** கூட்டுத்தாபனமானது ஏதேனும் கொள்வனவு, அளிப்பு, நன்கொடை, குத்தகை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு அல்லது வேறேதேனும் வகையில் கிடைக்கக்கூடிய அசைவுள்ள மற்றும் அசைவற்ற ஆதனத்தைப் பெறவும், வைத்திருக்கவும், சட்டப்படி இயலுமானதாலும், ஆற்றலுடையதாதலும் வேண்டுமென்பதுடன், விற்க, ஈடுவைக்க குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறுவகையில் கையாளவுமுள்ள முழுத்தத்துவத்துடன் கூட்டுத்தாபனத்தால் வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.*

**10.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது கூட்டுத்தாபன விதிமுறைகளை உருவாக்கியவர்களின் முன்னிலையிலன்றி எந்வொரு சாசனத்திலும் பொறிக்கப்படுதல் ஆகாது. அவர்கள் சமுகமாயிருந்ததற்கு அடையாளமாக அவர்களது பெயரை எழுதிக் கையொப்பமிடுதல் வேண்டுமென்பதுடன், எவரேனும் ஆள் சாட்சிக்காரராகக் கையொப்பமிடுவதினின்றும் தனி வேறானதாதல் வேண்டும்.

*குடியரசினதும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணல்.*

**11.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும் இலங்கை குடியரசின் உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியல் கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும் இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டவர்களும், அவர்கள்மூலம், அவர்களிலிருந்து அல்லது அவர்களின்கீழ் உரிமை கோருபவர்களும் தவிர்ந்த வேறு எவரேனும் ஆட்களினதும் உரிமைகளையேனும் பங்கப்படுத்தலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**12.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்